தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-11-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பொறுப்பேற்பு**

நூற்றாண்டுகளைக் கடந்த வேளாண் பாரம்பரியம் கண்ட அறிவுசார் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிமூன்றாவது (13) துணைவேந்தராக பேராசிரியர் முனைவர். நீ. குமார் அவர்கள் இன்று (16.11.2018) காலை முன்னாள் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்களிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

போராசிரியர் நீ. குமார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கடுக்கரை கிராமத்தில் 1955ம் ஆண்டு ஜுன் 29ம் நாள் பிறந்தார். தமது இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களை தோட்டக்கலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த மாணவர் என்ற பாராட்டு விருதுகளோடு பயின்றவர். தமது கல்வி பயிலும் காலத்தில் 5 தங்கப்பதக்கங்கள் உள்ளிட்ட 7 விருதுகள் மற்றும் 2 உயர்கல்வி பெற திறமையின் வழி பெறப்படும் ஊக்கத்தொகையினைப் பெற்று சிறந்து விளங்கியவர்.

சுமார் 36 ஆண்டுகளுக்கும் மேலாக வேளாண் பல்கலைக்கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியதோடு கோவை தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையராகவும் பணியாற்றியவர். அவர் தமது பணிகாலத்தில் 21 முதுநிலை மற்றும் 13 முனைவர் பட்ட மாணவ, மாணவியருக்கு வழிகாட்டும் பேராசிரியராக விளங்கியதோடு, இருமுனைவர் பட்ட மாணவர்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் உயரிய விருதாகிய ஜவஹர்லால் நேரு விருதினை (ICAR Jawaharlal Award) தாம் பெற்றதைப் போலவே வென்றிட வழிகாட்டியவராவார்.

பேராசிரியர் நீ. குமார் அவர்களது மூன்று தோட்டக்கலைப் பாடநூல்கள் மத்திய அரசின் தேர்வாணையக் குழுமத்தினரால் தலைசிறந்த வழிகாட்டி நூலாக இன்று வரை பரிந்துரைக்கப்படுகிறது. சுமார் 20 நூல்கள், 50க்கும் மேற்பட்ட சர்வதேச ஆராய்ச்சிக் கட்டுரரைகள், 80க்கும் மேற்பட்ட தேசிய அளவிலான ஆரர்ச்சிக் கட்டுரைகளின் ஆசிரியரான இவர் 18க்கும் மேலான வெளிநாடுகளுக்குச் சென்று சர்வதேச அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்று தமது ஆராய்ச்சி முடிவுகளை உலகுக்கு பறைசாற்றியவர்.

மேலும் அமெரிக்க நாட்டின் ஜியார்ஜியா சாவன்னா பல்கலைக்கழகம் மற்றும் ஜெர்மனியின் ஹன்னோவர் லெய்மினிஷ் பல்கலைக்கழகங்களுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்து கொள்ள அடிகோலினார். பல்கலைக்கழகத்தில் 17 தேசிய மற்றும் 3 சர்வதேச நிகழ்வுகள் ஏற்பாடு செயலராக இருந்து ஏற்பாடு செய்தவர்.

தமது பணிக்காலத்தில் சுமார் 20 அயல் நிதியுதவி ஆராய்ச்சித் திட்டங்களை ரூ.457 இலட்ச நிதி ஆதாரத்துடன் பெற்று முதன்மை ஆராய்ச்சியராக சிறப்புடன் செயலாற்றியவராவார். தமது ஆராய்ச்சியின் மூலம் 15க்கும் மேற்பட்ட பயிர் ரகங்களையும், சுமார் 10க்கும் மேற்பட்ட பாசன நீர்வழி உரமிடல் மற்றும் அடர்நடவுமுறை போன்ற மா, வாழை, பப்பாளி மற்றும் முந்திரி போன்ற பயிர்களில் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை கண்டறிந்து தமிழக அரசின் மாபெரும் வெற்றித் திட்டமான துல்லிய பண்ணைய திட்டத்திற்கு ஆராய்ச்சித்தளம் அமைந்திட பெரிதும் காரணமாயிருந்தவராவார்.

புதிய துணைவேந்தரை முன்னாள் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி, பல்கலைக்கழக மேலாண்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மேலதிகாரிகள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள் உட்பட பலரும் நேரில் வாழ்த்துக் கூறினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்